

கேரள மாநில தலைமைச் செயலகம் தர்பார் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் முதல்வருமான மறைந்த வி.எஸ்.அச்சுதானந்தன் அவர்கள் உடலுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் அமைச்சர் எஸ்.ரகுபதி மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார். உடன் கேரள முதல்வர் பினராயி விஜயன், கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன், கேரள மாநில தி.மு.க. நிர்வாகிகள் அனீஷ், துரை பேச்சிமுத்து, அருள் ஜோதி, அருண் மற்றும் பலர் உள்ளனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பாக மேற்கு சட்டமன்றத் தொகுதி, பழங்காநத்தம் பகுதி 71வது வார்டுக்குட்பட்ட முனியாண்டிபுரம், மாடக்குளம் மற்றும் தண்டல்காரன்பட்டி உள்ளிட்ட பகுதியைச் சார்ந்த சுமார் 2500 குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் பகுதிச் செயலாளர் சுதன், வட்டச் செயலாளர் முனியாண்டி, மாமன்ற உறுப்பினர்கள் ரவிச்சந்திரன், நாகநாதன், பொதுக்குழு முருகானந்தம், நிர்வாகிகள் ஜெயராமன், உதயகுமார், சௌந்தரராஜன், நாகராஜன், ஜெயராஜ், இளைஞர் அணி வெற்றிச்செல்வன், ஐயப்பன், மருதுராஜா உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

### மாமன்னர் இராசேந்திர சோழனின் பிறந்தநாளில் — அவர் உருவாக்கிய

# சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாட்டுப்பணி - சுற்றுலாப் பணிகள் மேற்கொள்ளப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 24 -

மாமன்னர் இராசேந்திர சோழனின் பிறந்தநாளில், அவர் உருவாக் கிய சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாட்டுப் பணிகளும், சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படுவது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட் டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**கங்கை கொண்டான், கடாரம் கொண்டான் எனப் பெரும்புகழ் எய்திய தமிழ் மாமன்னர் இராசேந்திர சோழனின் பிறந்தநாளான ஆடித் திருவாதிரையை அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடிட 2021 ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்தது நமது திராவிடமாடல் அரசு!**

**அவரது தலைநகரான கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழப் பேரரசின் வரலாற்றுச் சிறப்புகளையும் கடல் கடந்த வணிகத் தொடர்புகளையும் பறைசாற்றும் விதமாக அருங்காட்சியகம் அமைக்கப்படும் என அறிவித்து, அதற்கும் கடந்த ஜனவரி மாதம் அடிக்கல் நாட்டினேன். காண்போரைக் கவர்ந் திடும் வண்ணம் அது எழுந்து வருகிறது.**

**இவற்றின் தொடர்ச்சியாக, இராசேந்திர சோழனின் பிறந்த நாளில், அவர் உருவாக்கிய சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாட்டுப் பணிகளும் - சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### மனிதர்கள் - வனவிலங்குகள் மோதலைத் தடுக்கவும்,

# உரிய இழப்பீடு வழங்கவும் ஒன்றிய அரசு தேவையான முன் முயற்சிகளை எடுத்துள்ளதா?

## மக்களவையில் - டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

*புதுடெல்லி, ஜுலை 23-*

*திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் நேற்று முன்தினம் 21 சூலை 2025 அன்று மக்களவையில், மனிதர்கள் வனவிலங்குகள் மோதலை தடுக்கவும், உரிய இழப்பீடு வழங்கவும் ஒன்றிய அரசு தேவையான செயல் திட்டங்களை வகுத்துள்ளதா? என்றும், மலை வாழ் மக்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காடுகள்துறை இணையமைச்சர் கீர்த்தி வரதன் சிங் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.*

*ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காடுகள்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:*

*நாட்டின் பல்வேறு மாநிலங்களில் நடைபெறும் மனிதர்கள் வனவிலங்குகள் மோதல்கள் குறித்த தரவுகள், சுற்றுச்சூழல் அமைச்சகத்தில் சேகரிக்கபடவில்லை என்றும், வழிகாட்டு நெறிமுறைகள் உயிரிழப்புகளுக்கான இழப்பீடு வழங்குதல் போன்ற ஆலோசனைகளை மட்டும் மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசு வழங்கி வருகிறது என்றும், பிரதம மந்திரி பயிர்க்காப்பீட்டு திட்டத்தின் கீழ் வனவிலங்குகளில் ஏற்படும் பயிர் இழப்பிற்கு உரிய நிவாரண தொகை அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது என்றும், மாற்றுப் பயிர்கள் பயிரிடுவதற்கான ஆலோசனைகளை ஒன்றிய அரசு வழங்கி வருகின்றது என்றும் இணையமைச்சர் மக்களவையில் பதிலளித்தார்.*



*மேலும், யானைகள், சிறுத்தைகள், முதலைகள், கரடிகள், காட்டுப்பன்றிகள் போனற் வனவிலங்குகளால் உயிரிழப்பு ஏற்பட்டால் நிலைமையை எவ்வாறு கையாள்வது என்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை ஒன்றிய அரசு வகுத்துள்ளது என்றும்,*

*மனிதர்களை பாதுகாக்கும் வகையில் மின்சார வேலிகள், சுற்றுச்சுவர்கள் ஆகியவற்றை அமைச்சர் ஒன்றிய அரசு சிறப்பு திட்டங்களின் மூலம் நிதியுதவி அளித்து வருவதாகவும், வனவிலங்குகளால் ஏற்படும் கால்நடை இழப்புகள், பயிர் இழப்பு, ஆகியவற்றிற்கும் உரிய நிவாரணம் வழங்கப்படுகிறது என்றும், தீங்கு விளைவிக்கும் வனவிலங்குகளை வேட்டையாடுவதற்கு தேவையான அனுமதியை வழங்க தலைமை வனப்பாதுகாவலருக்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது என்றும், மாநில வனத்துறை அதிகாரிகளுக்கு உரிய பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது என்று ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காடுகள்துறை இணையமைச்சர் கீர்த்தி வரதன் சிங் அவர்கள், மக்களவையில் திமுக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.*



விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் எண்டியூர் ஊராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, திண்டிவனம் சிப்காட்தனித் துணை ஆட்சியர்விஜயா, மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன்,வட்டார வளர்ச்சி அலுவலர் அருளரசி உள்ளனர்.

### தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின்

# ஆராய்ச்சித் திட்டங்கள் - செயல்பாடுகள் - இளம் அறிவியல் மாணவர் சேர்க்கை!

## வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, ஜுலை 24 –

வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சித் திட டங்கள், செயல்பாடுகள் மற்றும் இளமறி வியல் மாணவர் சேர்க்கை குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

அதன் விவரம் வருமாறு:–

தமிழ்நாடு அரசு வேளாண் மைக்கென தனி நிதிநிலை அறிக் கைகளின் மூலம் பல்வேறு வேளாண் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ் நாட்டில் வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் தினை மேம்படுத்திட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழ கத் திற்கு நிதி வழங்கி வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி கள், செயல்பாடுகள் மற்றும் இள மறிவியல் மாணவர் சேர்க்கை குறித்த ஆய்வுக்கூட்டம், வேளாண் மை , உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் 21.7.2025 அன்று தலைமை செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், தமிழ்நாட்டில் காலநிலை மாற் றத்தை எதிர்கொள்ளும் வகை யில் புதிய வேளாண் பயிர் இரகங் கள் மற்றும் தொழில்நுட்பங்களை கண்டறிந்து உழவர்களிடையே அறிமுகப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும், நெல், சிறுதானி யங்கள், பயிறுவகைப் பயிர்கள், எண்ணெய்வித்



துப்பயிர்கள், கரும்பு ஆகியவற் றில் பகுதிக்கேற்ற உழவர்களால் பெரிதும் விரும்பப்படும் அதிக மக சூல் தரவல்ல இரகங்களை உரு வாக்கி உற்பத்தியை பெருக்க வேண்டும் எனவும், நெல் சாகுபடியில் எக்டருக்கு எட்டு டன் மகசூல் மற்றும் கரும்பு சாகுபடி யில் எக்டருக்கு 125 டன்கள் கொடுக்கக்கூடிய இரகங்களை உருவாக்கி உழவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் பல்கலைக்க ழக விஞ்ஞானிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

காய்கறிகள் மற்றும் பழப் பயிர் களில் புதிய இரகங்கள் உருவாக் குவதோடு, தமிழ்நாட்டில் நிலவும் வேளாண் தொழிலாளர்கள் பற் றாக்குறையை நிவர்த்தி செய்ய புதிய வகையான பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவி களை உருவாக்கி உழவர்களின் பயன்பாட்டிற்கு வழங்கவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் ஆராய்ச்சித்திட்டங்களான கால நிலை மாற்றத்தின் தாக்கங்க ளைக் குறைப்பதற்கான சிறப்பு வேளாண் கிரா மங்கள் உருவாக் குதல், குறைந்த சர்க்கரை அள வுக் குறியீடு (Low Glycemic Index) கொண்ட நெல் இரகங்களை உரு வாக்குதல், நுண்ணுயிர்க் கலவை யின் (Microbial Consortium) மூலம் மண்வள மேம்பாடு, போன்ற அனைத்து வேளாண் ஆராய்ச்சி திட்டங்களை யும் உழ வர்கள் பயன்பெறும் வகையில் விரைந்து செயல்படுத்துமாறு அறி வுறுத்தினார்.

மேலும், பாரம்பரிய பயிர் இர கங்களை சேகரித்து அவற்றைப் பாதுகாத்து, மதிப்பீடு செய்து பல் வேறு ஆராய்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளவும் மரபு சார்ந்த மற் றும் நவீன இனப்பெருக்க வழிக ளின் மூலம் காலநிலை மாற்றத் திற்கு ஏற்ற அதிக மகசூல் தரக்கூடிய இரகங்கள் மற்றும் வறட்சி, களர் உவர் நிலங்கள், வெள்ளப்பாதிப்புகளை தாங்கி வளரும் தன்மைகொண்ட இரகங் களை கண்டறியுமாறும் வேளாண் மைஉழவர் நலத்துறை அமைச்சர் அறிவுறித்தினார். துரிதவழி பயிர் இனப்பெருக்கம் வாயிலாக குறைந்த வயது மற்றும் அதிக மக சூல் தரக்கூடிய புதிய பயிர் இரகங் களை விரைவில் கண்டறியவும், கரும்பில் அதிக சர்க்கரைக்கட்டு மானம், உயர் விளைச்சல், நோய் மற்றும் பூச்சி எதிர்ப்பு சக்தி கொண்ட இரகங்களை ஆராய்ச்சி மூலம் உருவாக்கிடவும் கரும்பு ஆராய்ச்சி விஞ்ஞானிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

உழவர்கள் நலன் கருதி, அதிக உற்பத்தித்திறன் கொண்ட, பிற மாநில பயிர் இரகங்களில், தமிழ் நாட்டிற்கு உகந்த இரகங்களைக் கண்டறிந்து, அறிவிக்கை செய் திட உரிய நடவடிக்கை எடுக்குமா றும், வல்லுநர் விதை உற்பத்தி யினை அதிகரிக்குமாறும் கேட்டுக்கொண்டார், வேளாண்மை மற்றும் தோட்டக் கலை துறை சார்ந்த அலுவலர்க ளுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் இணைந்து தரமான விதைகளை உற்பத்தி செய்து உழவர்களுக்கு விநியோ கம் மற்றும் தொழில்நுட்ப பரவ லாக்கம் செய்திடவும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள் ளப்படவேண்டிய ஆராய்ச்சித் திட் டங் களை வகுத்து செயல்படுத்திட வும் அறிவுரைகள் வழங்கினார்.

உழவர்களுக்கு கூடுதல் வருமா னம் பெறும் வகையில் செஞ்சந்த னம், சந்தனம், தேக்கு, மகோகனி போன்ற மரப்பயிர்களை பயிரிட ஊக்குவிப்பதுடன் ஊடுபயிர் சாகு படிக்கேற்ற பயிர்களை ஆராய்ச்சி மூலம் கண்டறிந்து, உழவர்களி டையே பரவலாக்கம் செய்திட அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணை யர் மற்றும் செயலர், வ.தட்சிணா மூர்த்தி, வேளாண்மைத்துறை இயக்குநர், பா.முருகேஷ், சர்க்க ரைத்துறை இயக்குநர், த.அன்பழ கன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்கு நர், பெ. குமாரவேல் பாண்டியன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்க லைக்கழக பதிவாளர்/ துணை வேந் தர் (பொறுப்பு), சு.தமிழ்வேந்தன் மற் றும் வேளாண் விஞ்ஞானிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### உதகை, திருப்பத்தூர், திருவாரூர், கள்ளக்குறிச்சி மற்றும்

# நாமக்கல் மாவட்டங்களில் பணிபுரியும் மகளிர்க்கான தோழி விடுதிகள்!

## டெண்டர் கோரப்பட்டுள்ளது!

*சென்னை, ஜுலை 24 -*

*வேலை செய்யும் பெண்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு தமிழ்நாடு அரசால் தோழி மகளிர் விடுதி தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*தமிழ்நாடு முழுவதும் பெரும் வரவேற்பைப் பெற்ற தோழி விடுதியை மேலும் விரிவுபடுத்த புதிதாக காஞ்சிபுரம், ஈரோடு, தருமபுரி, சிவகங்கை, தேனி, கடலூர், நாகை, ராணிப்பேட்டை, கரூர் ஆகிய நகரங்களில் 72 கோடி ரூபாயில், 700 படுக்கை வசதி கொண்ட புதிய தோழி விடுதிகள் அமைக்கப்படும் என மகளிர் தினத்தன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.*

*இந்நிலையில், தோழி விடுதிகள் கட்டும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இதனைத்தொடர்ந்து, உதகை, திருப்பத் தூர், திருவாரூர் மாவட்டம் விளமல் கிராமம், கள்ளக்குறிச்சி மாவட்டம் வீர சோழபுரம் மற்றும் நாமக்கல் உள்ளிட்ட 5 பகுதிகளில் தோழி மகளிர் விடுதி கட்டுவதற்கான டெண்டர் கோரப்பட்டுள்ளது.*

### தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாநில நிர்வாகிகள், மண்டல பொறுப்பாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் பயிற்சிக் கூட்டம்!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கை!

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள், மண்டல பொறுப்பாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ((DLC)), சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC) ஆலோசனைக் கூட்டம் வருகிற 26-07-2025 சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மேற்கூறிய பொறுப்பாளர்களுக்கு பயிற்சி வகுப்புகள் சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில், எனது தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மண்டலப் பொறுப்பாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ((DLC)), சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ((CLC)) அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப் பயிற்சிக் கூட்டத்தில் வருகைப் பதிவேடு வைக்கப்பட இருப்பதால் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 14.07.2025

**என்.ஆர்.இளங்கோ எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை